**தலைப்பு 226 – குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூலை 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2021 சனவரி 06 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தைத் தவிர, 2019 டிசம்பர் 03 ஆந் திகதிய 271/2019 இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கைப் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்கவும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடியவாறான உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களமானது வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேண வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டின் பொருட்டு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து அதனை பேணுவதை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம்முறைமையின் செயற்திறன் அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட்டு அதற்கமைய முறைமையை ஆக்கபூர்வமாக்குவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களது கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதென நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கையை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்ட சான்றுறுதிப்படுத்தலாகும். எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதன் உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடுமாதலால் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது அது தொடர்பாக கருத்திற் கொள்ள வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும்போதும் மதிப்பிடும்போதும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பிரபலமாவதால் தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்த்துக் கொள்ளல் என்பன மோசடி ஏற்படக் காரணமாக அமையலாம் என்பதனால்,

- திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வம் தொடர்பான அபிப்பிராயத்தை வெளியிடுவதற்குக் கருதாதபோதும், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டு தொடர்பாக உணரப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் அடங்லான நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் என்பன பொருத்தமான மற்றும் நியாயமானவாறு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும்போது, நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) முன்னைய ஆண்டினது நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது பரிந்துரைகள் அமுலாக்கப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிலையான சொத்துப் பதிவேட்டிற்குப் பதிலாகக் கணக்காய்வுக்கு வழங்கப்பட்ட கணனி அச்சீட்டு நிலையான சொத்துப் பதிவேட்டில் (BOS Report) ஆண்டின் ஆரம்ப மீதியான ரூபா 377,752,173 காட்டப்படவில்லை. | சுற்றறிக்கையின் அறிவுறுத்துரைப்படி நிலையான சொத்துப் பதிவேடு சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். | கணனி அச்சீட்டு நிலையான சொத்துப் பதிவேட்டில் ஆண்டினது ஆரம்ப மீதி பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.<br>முடிவடையாத வேலை (9160) 4,730,515,388<br>காணி (9153) 66,945,000<br>கட்டிட நிர்மாணம் (9151) 36,135,177<br>37,247<br>இயந்திரமும் இயந்திர சாதனங்களும் (9152) 60,625,000<br>279,135,864 |

| | | |
|---|---|---|
| (ஆ) நிதி சார்பற்ற சொத்துக் கூற்றில் 2018 ஆம் ஆண்டின் இறுதி மீதியை 2019 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் பதிவு செய்யும் போது முன்னைய ஆண்டின் கணக்காய்வு ஐய வினாக்குப் பொருத்தமாக 2019 ஆகஸ்ட் 05 ஆந் திகதிய மாற்றுத்தாள் மூலமாக சீராக்கல் செய்யப்பட்டபோதும், 9152 ஆம் இலக்க சுட்டு இலக்கம் 9152 இயந்திர மற்றும் இயந்திர சாதன மீதியைப் பதிவு செய்கையில் ரூபா 271,300 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | நிதி நிலைமைக் கூற்றில் சொத்துக்களின் சரியான பெறுமதி கணக்கிலிடப்பட வேண்டும். | மாற்றுத் தாளின் பெறுமதி ரூபா 340,032,164 ஆக திறைசேரிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட போதும், திணைக்கள மீதியைச் சமப்படுத்த திறைசேரி ரூபா 271,300 சீராக்கலை மேற்கொண்டுள்ளது. எவ்வாறாயினும், 2019.12.31 இல் உள்ளவாறு திணைக்களம் மற்றும் திறைசேரி மீதி (9152-இயந்திரமும் இயந்திர சாதனங்களும்) ரூபா 376,270,173 ஆக சமமாகி உள்ளது. |

**1.6.2 முற்பணக் கணக்கு மீதி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை ரூபா 160,309,261 ஆகியபோதும், திணைக்கள கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூபா 160,790,054 ஆகியமையால் அவ்விரு மீதிகளுக்குமிடையே ரூபா 480,793 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | வேறுபாட்டுக்கான காரணத்தைக் கண்டறிந்து சீராக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் தனிப்பட்ட கணக்கு மீதிக்கும் கட்டுப்பாட்டு மீதிக்குமிடையே வேறுபாடு கிடையாது. எனினும், கணக்காய்வு ஐய வினாவில் சுட்டிக்காட்டப்பட்ட வேறுபாட்டிற்கு முன்னைய ஆண்டில் பெறப்படாத மீதி மற்றும் மீண்டும் பரிசீலிக்கும் போது இனங்காணப்பட்ட வேறுபாட்டின் அடிப்படையில் கட்டுப்பாட்டக் கணக்கில் மேற்கொள்ள்பட்ட சீராக்கலே காரணமாகும். தற்போது இவ்வித்தியாசத்திற்கான காரணம் கண்டறியப்பட்டுள்ளது. 2020 கணக்குத் தயாரிக்கப்படும் போது திருத்தம் செய்யப்படும். |

### 1.6.3 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பொறுப்புகள் தொடர்பான கூற்று (i) இல் நி.பி 94(2) மற்றும் (3) பிரகாரம் கடப்பாடு மற்றும் பொறுப்பு என்பவற்றின் பெறுமதியாகக் காட்டப்பட்ட ரூபா 2,114,031 உறுதி செய்யப்படுவதற்கான சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | பெறுமதியைஉறுதி செய்வதற்கான சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ரூபா 9,893,851 பெறுமதியை உறுதி செய்வதற்குரிய சான்றாக குறித்த உடன்படிக்கையின் பிரதி இத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றது. |
| (ஆ) | நிதிச் சார்பற்ற சொத்துக் கூற்றில் 2019 ஆம் ஆண்டின் கொள்வனவாகிய ரூபா 100,508,249 மீதியை கணனி அச்சீட்டு நிலையான சொத்துப் பதிவேட்டில் (BOS Report) தெளிவாக இனங்காண முடியாதிருந்தது. | 2019 ஆம் ஆண்டினது கொள்வனவுகளை சரியாக இனங்காணும் விதத்தில் பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | திறைசேரியின் அறிவுறுத்துரைப்படி திணைக்களம் கணனி அச்சீட்டு நிலையான சொத்துப் பதிவேட்டைப் (BOS Report) பேணுகின்றது. அதில் 2019 ஆம் ஆண்டின் சகல கொள்வனவுகளும் உள்ளடங்கியுள்ளன. நிலையான சொத்துப் பதிவேட்டுக்கும் மூலதனச் சொத்து சுவீகரிப்புச் செலவினத்திற்கும் இடையே ஏதேனும் வித்தியாசம் இருப்பின் கணக்கிணக்கம் செய்யும் போது தென்படும். எனினும், அவ்வாறான வித்தியாசமின்மை கிடையாது. |

**1.6.4 சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 371(5) ஆம் நிதிப் பிரமாணம் | இடைக்கால முற்பணம் வழங்கப்பட்டதன் பின்னர், குறித்த பணி முடிவடைந்து 10 நாட்களுக்குள் அந்த இடைக்கால கட்டுநிதி தீர்வு செய்யப்பட வேண்டும் எவ்வாறாயினும், திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட 16 இடைக்கால கட்டு நிதி தீர்வு செய்யப்படுவதில் 16 நாட்கள் தொடக்கம் 8 மாதம் 13 நாட்கள் வரையிலான காலம் கடந்திருந்தது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | உத்தியோகத்தர்கள் பெற்ற இடைக்காலக் கட்டு நிதியாவும் குறித்த ஆண்டின் டிசசம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் தீர்வு செய்யப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் திருத்தம் செய்யப்பட்ட நிதிப் பிரமாணம் 371(5) க்கமைய முற்பணம் வழங்கப்பட்ட 10 நாட்களுக்குள் தீர்வு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவை 2006 | | | |
| (i) | 2.3.2 (இ) வழிகாட்டல் | மிரிஹான தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்போரது பாதுகாப்புக்கென ரூபா 899,184 செலவில் CCTV கெமரா ஒன்றைப் பொருத்துவதற்கான கெமரா முறைமை கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கொள்வனவு செய்யப்பட்டு 06 மாத முடிவில் அது செயலற்றுப் போனது. | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 6.1, 6.2.2 6.3.3 ஆம் வழிகாட்டல்கள் | தளபாடங்கள், அலுவலக உபகரணம், CCTV கெமரா என்பவற்றை ரூபா 5,058,663 க்கு கொள்வனவு செய்வது சம்பந்தமாக கூறுவிலைச் சமர்ப்பிக்க வேண்டிய காலவரம்பும் தேவையான மாதிரி வடிவங்களையும் உள்ளடக்கிய கூறுவிலைக் கோரல் ஆவணங்கள் வழங்குனர்களுக்கு அனுப்பப்பட்டமை உறுதி செய்யப்படவில்லை.<br><br>அவ்வாறே, பொருட் கொள்வனவுக் குழு கூறுவிலைத் திறப்புக் குழுவை நியமித்திருந்ததுடன், சமர்ப்பிக்கப்பட்ட கூறு விலைகளுக்கான ஆவணங்களில் கூறுவிலைகள் திறக்கப்பட்ட திகதி, கூறுவிலைத் திறப்புக் குழுவினது தொகையை குறிக்கும் முத்திரை, சிறு கையெழுத்து என்பன இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (iii) | 8.9.1 (ஆ) வழிகாட்டல் | பண்டங்களும் சேவைகளும் ரூபா 500,000 க்கு மேற்படுமிடத்து முறையான ஒப்பந்த உடன்படிக்கை எழுதப்பட்டு கைச்சாத்திடப்பட வேண்டும். எவ்வாறாயினும், ரூபா 4,829,278 பெறுமதியான தளபாடங்கள் அலுவலக உபகரணங்கள், CCTV கெமரா கொள்வனவின் போது அவ்வாறு நடைபெறவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (iv) | 8.12.3(அ) மற்றும் (ஆ) வழிகாட்டல் | வழங்கப்பட்ட பண்டங்கள் மாதிரி வடிவத்திற்கும் ஏனைய விதிகளுக்கும் உட்பட்டது என்றும் வழங்கப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை ஒப்பந்த ஏற்பாடுகளுடன் | - மேற்படி - | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| | இணங்குவதாகவும் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தரால் சான்றுறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் கொடுப்பனவு நடைபெற வேண்டும். எனினும், அவ்வாறு சான்றுறுதிப்படுத்தப்படாது தளபாடங்கள், அலுவலக உபகரணம், CCTV கெமரா கொள்வனவின் பொருட்டு 5 வழங்குனர்களுக்கு ரூபா 5,058,663 வழங்கப்பட்டிருந்தது. | |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 வருமான முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் 2019 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மூல வருமான மதிப்பீடு ரூபா 19,000,000,000 ஆகும். மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் மூல வருமான மதிப்பீட்டின் 74 சதவீதமாகிய ரூபா 14,054,129,607 ஆகும். அதற்கமைய, மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்துக்குமிடையே 26 சதவீதமான ரூபா 4,945,870,393 வேறுபாடு நிலவியது. | வருமானத்தைச் சரியாக மதிப்பீடு செய்ய வேண்டும். | இலத்திரனியல் பயண அங்கீகாரத்தின் கீழ் சம்பாதிப்பதற்கு எதிர்பார்த்த வருமானம் ரூபா 11,000,000,000 ஆகும். எவ்வாறாயினும், 2019 ஏப்ரலின் போது ஏற்பட்ட ஈஸ்டர் அனர்த்தம் காரணமாக சுற்றுலாப் பயணிகளது வருமதி கட்டுப்படுத்தப்பட்டமையால் உள்ளவாறு சம்பாதித்த தொகை ரூபா 5,859,993,331 ஆகும். இதற்கமைய, ஒட்டுமொத்த வருவாயில் ரூபா 5,140,006,069 குறைவு ஏற்பட்டது. அவ்வாறே, வீசா கட்டணத்தை அறவிடாமை போன்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் வீசா கட்டணத்தின் மூலம் சம்பாதிக்க எண்ணிய ரூபா 1,500,000,000 ஆகவிருந்தும், உள்ளவாறு பெறப்பட்ட வருமானம் ரூபா 1,169,537,414 ஆகும். அதற்கமைய வருமானக் குறைவு ரூபா 330,462,586 ஆகும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | குடியுரிமைப் பிரிவின் கணனி முறைமை மூலம் பெறப்பட்ட வருமான அறிக்கை மற்றும் திணைக்களத்தின் ஒட்டுமொத்த வருமான அறிக்கையில் குடியுரிமைப் பிரிவுக்கு உரிய வருமானத்தைக் கணக்கிணக்கம் செய்கையில் ரூபா 862,500 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | வருமானம் சரியாகக் கணிப்பிடப்பட வேண்டும். | இரட்டைக் குடியுரிமைக்கு விண்ணப்பம் கோருபவர்களிடமிருந்து அறவிட வேண்டியிருந்த ரூபா 57,500 வீதப்படியான தொகைக்குப் பதிலாக ரூபா 345,000 வீதப்படி அறவிடப்பட்டதால் அதிகமாக அறவிடப்பட்ட தொகை ரூபா 287,500 வீதப்படி குறித்த நபர்களுக்கு திருப்பி அனுப்பப்பட்டது. எவ்வாறாயினும், திணைக்களத்தின் கணனி முறைமையில் இதுவரை இரட்டைக் குடியுரிமை சான்றிதழ் அச்சிடப்பட்டிராமையால் கணனி முறைமையில் திருத்தம் மேற்கொள்ளப்படாத போதும், ஒட்டுமொத்த வருமான அறிக்கையில் திருப்பிச் செலுத்தப்பட்ட தொகை கழிக்கப்பட்டு சரியான வருமானம் கணக்கிலிடப்பட்டுள்ளது. |

## 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த மதிப்பீட்டில் 2 மூலதனச் செலவின விடயங்களுக்கும் 2 மீண்டு வரும் செலவின விடயங்களுக்கும் அதிக நிதி ஏற்பாடு செய்யப்பட்டமையால் செலவிடாது எஞ்சிய ரூபா 82,450,000 வேறு நான்கு செலவின விடயங்களுக்கு மாற்றஞ் செய்யப்பட்டிருந்தது. | தேவையை இனங்கண்டு சரியான மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | வருடாந்த வரவு, செலவுத் திட்ட மதிப்பீட்டைத் தயாரிக்கும் போது எதிர்பார்த்த நிதி வருடாந்த ஒதுக்கீடு அதிகாரச் சட்டத்தில் போதியளவு அங்கீகரிக்கப்படாமையால் ஏற்பாடு செய்யப்பட்ட நிதியில் செலவினத்தை முகாமையிட்டவாறு ஏற்கனவே திட்டமிட முடியாததும் எதிர்பாராததுமான அத்தியாவசியமானதும் பிற்போட முடியாததுமான செலவினத்திற்கு நிதிப்பிரமாண வரம்பிற்குள் இந் நிதி மாற்றம் நடைபெற்றுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | விடய இலக்கம் 1409 (பிற) "(ETA) இலத்திரனியல் பயண அங்கீகாரத்தின் கீழ் வீசா கட்டணம் விடுவிக்கப்பட்டதால் வங்கித் தரகைச் செலுத்துவது நடைபெறவில்லை" என கணக்கில் எஞ்சிய தொகைக்கு காரணமாக விளக்கமளிக்கப்பட்ட போதும், இச் செலவின விடயத்தில் ரூபா60.25 மில்லியன் அல்லது மூல நிதியேற்பாட்டில் 27 சதவீதம் ஏனைய 7 செலவினங்களுக்கு மாற்றஞ் செய்யப்பட்ட பின்னரும் மேலும் 23 சதவீதம் எஞ்சியிருந்தது. | - மேற்படி - | 1409 - இலத்திரனியல் பயண அங்கீகாரம் (ETA) வருமான மதிப்பீட்டிற்கு ஏற்ற விகிதத்தில் வங்கித் தரகுக்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்ட போதும், அரசாங்கத்தின் கொள்கைப் பிரகாரம் இலத்திரனியல் பயண அங்கீகாரத்தின் கீழ் எதிர்பார்த்த வருமானம் 46சதவீதம் குறைவடைந்ததால் வங்கிக்குச் செலுத்த வேண்டிய தரகும் அதற்கொப்பாக குறைவடைந்திருந்தது. |
| (இ) | 2019 செப்டம்பர் 24 ஆந் திகதிய 5/2019 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்டச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டினது மூலதனச் செலவினத்திற்கான வருடாந்த நிதியேற்பாட்டில் 15 சதவீதமும் 10 சதவீதமும் ஆக 25 சதவீத கூட்டுத்தொகை கட்டாயமாக சேமிக்கப்பட வேண்டும். எனினும், திணைக்களத்தின் 09 மூலதன செலவின விடயங்களுக்கு மொத்த நிகர நிதியேற்பாடு ரூபா 704,700,000 ஆகவிருந்ததுடன் மொத்தச் செலவினம் ரூபா 642,236,363 ஆகவுமிருந்தது. | தேசிய வரவு, செலவுத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தேசிய வரவு, செலவுத் திட்டச் சுற்றறிக்கை 5/2019 வெளியிடப்படும் சந்தர்ப்பத்திலும் 2509 மூலதன செலவின விடயத்தில் வெற்றுக் கடவுச் சீட்டுக்களைக் கொள்வனவு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 457 மில்லியனுக்கு மேலதிகமாக ரூபா 68.7 மில்லியன் மேலதிக நிதியேற்பாடும் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் மொத்த நிதியேற்பாடு ரூபா 525.7 மில்லியனாகியது. அதில் ரூபா 523.8 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. ஆகவே, ஒட்டுமொத்த மூலதன நிதியேற்பாடாகிய ரூபா 704.7 மில்லயனில் 25 சதவீத சேமிப்பாக கருதப்படக் கூடிய எஞ்சிய மூலதன நிதி ஏற்பாடு ரூபா 179 மில்லியன் மாத்திரமே. அதில் 25 சதவீதமாகிய ரூபா 44.75 மில்லியன் சேமிக்கப்பட வேண்டுமாயினும், ரூபா 62.4 |

| | | |
|---|---|---|
| அதற்கமைய, ரூபா 62,463,637 சேமிக்கப்பட்டதால் நிகர நிதியேற்பாட்டில் 8.8 சதவீதம் மாத்திரமே சேமிக்கப்பட்டிருந்தது. | | மில்லியன் (34.8 சதவீதம்) சேமிக்கப்பட்டு வரவு செலவுத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 2.3 பொறுப்புகளுக்கும் கடப்பாடுகளுக்கும் உட்படுதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2019 ஆம் ஆண்டின் பொருட்டு மீளாய்வாண்டில் தீர்வு செய்யப்பட்ட ரூபா 8,177,478 பொறுப்பானது கடப்பாடு மற்றும் பொறுப்பு தொடர்பான iii ஆம் iv ஆம் குறிப்புகளில் காட்டப்படவில்லை. | சகல பொறுப்புகளும் பொறுப்புக் கூற்றில் பதிவு செய்யப்படுதல் வேண்டும். | இறுதி நிதிக் கூற்று தயாரிப்புச் சந்தர்ப்பத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததால் பொறுப்பாக உள்ளடக்கப்பட முடியவில்லை. எனினும், பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட கொடுப்பனவுக்கான கோரிக்கைத் தொகை இதில் அடங்கும். |
| (ஆ) 2017 ஆம் ஆண்டு தொடக்கம் வருடாந்த ஒதுக்கீட்டு கணக்கின் மூலம் ஏற்பாடு செய்யப்படும் நிதியை சிறந்த மட்டத்தில் உபயோகிக்கப்படுத்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாட்டு வரம்பிற்கு அதிகமாக கடப்பாடுகளும் பொறுப்புகளும் ஏற்படுபவதைத் தவிர்த்துக் கொள்ளுதல் ஆகிய நோக்கத்துடன் வெளியிடப்பட்ட 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குச் சுற்றறிக்கையின் 1 ஆம் | அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாட்டு வரம்பிற்கு அதிகமாக பொறுப்புகளும் கட்பாடுகளும் ஏற்படலாகாது. | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான கூற்று (குறிப்பு-03) க்கமைய குறிப்பிடப்பட்டது நி.பி 94(1) இன் பிரகாரம் நிதியேற்பாடு வரம்பிற்குள் ஏற்படுத்தப்படும் பொறுப்புகளுக்கான நிரலே ஆகும். அதற்கமைய, 1101 செலவின விடயத்தைத் தவிர, ஏனைய பொறுப்புகள் ஆண்டிற்கான நிதியேற்பாட்டை அதிகரிக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| பந்தியின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வில்லை. அதற்கமைய அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாட்டு வரம்பிற்கு அதிகமாக ரூபா 26,367,692 க்கான கடப்பாடுகளும் பொறுப்புகளும் ஏற்பட்டிருந்தன. | | |
| (இ) மேற்படி (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் (இ) பந்தியின் பிரகாரம் ஏதேனும் ஒரு நிதியாண்டுக்குரிய சகல பொறுப்புகளும் அவ்வாண்டிலேயே பணக் கொடுப்பனவின் மூலம் தீர்வு செய்யப்பட வேண்டும். எந்தவொரு பொறுப்பும் அடுத்துவரும் ஆண்டில் தீர்வு செய்யப்படுவதற்கான நோக்கத்துடன் முன்கொண்டு செல்லப்படலாகாது என அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், ரூபா 488,132 பொறுப்பிற்கான நடவடிக்கை எடுக்கப்படாது 2020 ஆம் ஆண்டிற்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தது | எந்தவொரு பொறுப்பையும் அடுத்து வரும் ஆண்டில் தீர்வு செய்யும் நோக்கத்துடன் நடவடிக்கை எடுக்கப்படலாகாது. | நி.பி 94(2) க்கமைய 2019 ஆம் ஆண்டில் கொடுப்பனவுகளுக்குச் சமர்ப்பிக்கப்படாத போதும் பொறுப்பாக இனங்காணப்பட்ட கொடுப்பனவுகள் 2020 ஆம் ஆண்டில் தீர்வு செய்யப்படுவதற்காக பொறுப்பாக மேற்கொண்டு செல்லப்பட்டிருந்தது. இதில் ரூபா 367,422 க்கான விலைப்பட்டியல் கொடுப்பனவிற்காக இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை. உறுதிச் சான்றை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்க முடியவில்லை. |

### 2.4 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிணை வைப்புக் கணக்கில் உள்ள 2 ஆண்டுகளைக் கடந்த ரூபா 75,000 பிணை வைப்பு சம்பந்தமாக நி.பி 571 க்கமைய நடவடிக்கை எடுக்கப்படாததுடன், | கணக்கைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | பாதுகாப்பு பிணை வைப்பை விடுவிப்பதற்கான ரிக்வியூசிசன் பத்திரங்களையும் காசுவைப்பு பற்றுச்சீட்டையும் சமர்ப்பிக்குமாறு குறித்த நிறுவனங்களுக்கு |

| | | |
|---|---|---|
| அக்கணக்கு புதுப்பிக்கப்படாதுமிருந்தது. | | அறிவிக்கப்பட்டபோதும், அவை சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றைத் தீர்வு செய்ய முடியவில்லை. எவ்வாறாயினும், 2020 ஆம் ஆண்டில் உடன்படிக்கை செய்யப்படும் போது இதனைத் தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான கணக்கிணக்கக் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 06 அரச உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 386,950 கடன் மீதியை இதுவரை தீர்வு செய்யப்படாதிருந்தது. | நிலுவையாக உள்ள கடன் மீதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | மரணமடைந்த மற்றும் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களது கடன் மீதயை ஓய்வூதியப் பணிக்கொடையில் அறவிடவும் வேலை இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களது கடன் நிலுவை சம்பந்தமாக சட்டப் பிரிவுக்கு அறிவிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிறுவனம் ஒன்றினது எதிர்வரும் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டம் 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மூன்று ஆண்டு கால மத்திய தவணை வரவு செலவுத் திட்ட வரையறைக்குள் குறித்த நிதியாண்டுடன் தொடர்புடையதாக தயாரிக்க வேண்டுமாயினும், 2019 ஆம் ஆண்டிற்கெனத் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம் 2019 ஆம் ஆண்டில் 6 சந்தர்ப்பங்களில் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. | நடைமுறையில் செயற்படுத்தக் கூடியவாறான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

## 3.2 பொருட் கொள்வனவு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வீசா பிரிவுகள் கட்டுப்பாட்டாளர் நேபாளத்தில் நடைபெறும் மாநாட்டுக்குச் செல்வதற்கு Hemas Travel (Pvt) Ltd. நிறுவனத்திலிருந்து ரூபா 105,000 வான் பயண டிக்கட் ஒன்றைப் பெற்றிருந்தார். கூறுவிலைகளை வழங்கிய மூன்று நிறுவனங்களில் Hemas Travel (Pvt) Ltd நிறுவனத்திடமிருந்து மாத்திரமே திகதியும் பெயரும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஏனைய 2 நிறுவனங்களும் பெயர் குறிப்பிடப்படவில்லை. | சுற்றறிக்கைப் பிரகாரம் போட்டியுடனான கூறு விலைகள் கோரப்பட்டு வழங்குதல் சரியாக தெரிவு செய்யப்பட வேண்டும். | இதில் குறிப்பிடப்பட்ட வான் பயண டிக்கட்டைக் கொள்வனவு செய்தமை தொடர்பான கணக்காய்வு ஐய வினாவில் அவதானிக்கப்பட்ட தவறும் குறைபாடும் திருத்தம் செய்யப்பட்டு எதிர்காலத்தில் சரியான பொருட் கொள்வனவு நடைமுறையின் பிரகாரம் வான் பயண டிக்கட்டைப் பெறுவதற்கு கூறு விலைகளைக் கோருவதற்கும் அதற்கமைய அவற்றிற்கும் கொடுப்பனவு மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தயவுடன் தெரிவிக்கின்றேன். |
| (ஆ) பிரேசில், பிரான்ஸ், நேபாளம், தாய்லாந்து, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் நடைபெற்ற மாநாடுகளில் பங்குபற்றுவதற்கான வான் பயண டிக்கட்டுக்கள் போட்டியுடனான கூறு விலைகள் கோரப்படாது ரூபா 2,141,000 க்கு ஒரு நிறுவனத்திடமிருந்து மாத்திரமே பெறப்பட்டிருந்தன. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திற்கும் பண்டாரநாயக்க விமான நிலையத்திற்குமிடையே தரவுக் கேபிளைப் பொருத்துவதற்குமான (Laying CAT 6a Data Cabiling) பொருட் கொள்வனவின் போது திணைக்களத்தின் பொருட் கொள்வனவுக் குழுக் கூட்டத்தை நடாத்துவதற்கு முன்னரே அங்கீகாரம் பெறப்படாது ரூபா 1,203,300 க்கான பொருட் கொள்வனவுக்கான கடிதம் வழங்கப்பட்டதன் மூலம் அப்பணி முறையாக நடைபெற்றிருக்கவில்லை | பொருட் கொள்வனவு தவறில்லாது நடைபெற வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

**3.3 இழப்புகளும் நட்டங்களும்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 டிசம்பர் 10 முதல் 19 வரை தாய்லாந்திலும் இங்கிலாந்திலும் நடைபெற்ற SITA மாநாடு மற்றும் கண்காட்சியில் கலந்து கொள்ள திணைக்களத்தைச் சாராத உத்தியோகத்தர் ஒருவரின் பொருட்டு BOC Travels நிறுவனத்திற்கு ரூபா 251,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | திணைக்கள உத்தியோகத்தர் களுக்கு மாத்திரமே கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | அமைச்சரவையின் 17/2628/7491023/DNTDI/இலக்க அங்கீகாரத்தின் பிரகாரம் SITA/boarder நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட தொழில்நுட்ப மாதிரி வடிவத்தை பரிசீலித்து அதற்கமைய எமது திணைக்களத்திற்கு தொழில்நுட்ப அறிக்கை ஒன்று வழங்கப்படாதிருந்ததால் 2018/12/15 தொடக்கம் 2019/12/19 வரை ஐக்கியஇராச்சியத்தில் குறித்த நிறுவனத்தின் தொழில்நுட்ப முறைமையை அந்நிறுவனத்துடன் இணங்கிக் கொண்டவாறு அவதானிப்பதன் பொருட்டு தொழில்நுட்ப மாதிரி வடிவம் மற்றும் தேவைகள் தொடர்பான |

| | | |
|---|---|---|
| | | சிறந்த அறிவுடைய ஆலோசகர் ஒருவர் பங்குபற்றுமாறு கோரப்பட்டதால் அவருக்கான வான் பயண டிக்கட் செலவினமும் கொடுப்பனவு செய்யப்பட்டது. |

**3.4 சொத்து முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) குறித்த காலத்திற்குள் பயன்படுத்தப்படாததால் களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப் பட்டிருந்த ரூபா 6,472,571 பெறுமதியான வெற்றுக் கடவுச் சீட்டுக்கள் 07 ஆண்டுகளாக பயன்படுத்தப்படாது இழப்பு ஏற்பட்டிருந்ததுடன் ரூபா 3,889,685 பெறுமதியுடைய வெற்றுக் கடவுச் சீட்டுக்கள் ஏறக்குறைய 04 முதல் 15 ஆண்டுகளாக பயன்படுத்தப்படாது வைக்கப்பட்டிருந்தன. | அரசாங்கத்தின் பணம் விரயமாகாது பயன்படுத்தப்பட வேண்டும். | இந்தியாவில் முகாம்களின் தஞ்சமடைந்துள்ளவர் களுக்கு ஒரே தடவை மாத்திரம் இலங்கைக்கு வருவதற்காக இக்கடவுச்சீட்டுக்கள் பயன்படுத்தப்படும். |
| (ஆ) 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தின் 2 வாகனங்களைக் கைதவிர்ப்புச் செய்வதற்கு உள்ளக மற்றும் உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் | முறையான கைதவிர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

உள்ளூராட்சி அமைச்சின் மேலதிகச் செயலாளரால் 2019 ஒக்டோபர் 02 ஆந் திகதி அங்கீகாரமளிக்கப் பட்டிருந்தது. எனினும், 2019 தொடக்கம் மீளாய்வாண்டு இறுதியிலும் கைதவிர்ப்புச் செய்யப்படாதிருந்தன.

## 3.5 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) திணைக்களத்தின் கணனி முறைமை, அதாவது மென் அணி மற்றும் அதனோடிணைந்த தரவுகள் மற்றும் பிரத்தியேக கட்டுப்பாட்டு முறைமை, வீசா தயாரிப்பு, கடவுச்சீட்டு முறைமைகளுக்கு Information International (Pvt) Ltd. நிறுவனத்துடன் 2003 யூன் 16 ஆந் திகதி தொடக்கம் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. அந்நாள் முதலாக 2019 ஆம் ஆண்டு வரை அந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த தொகை ரூபா 135,154,160 ஆகும். இவ்வளவு செலவுடன் பேணப்படும் கணனி முறைமையின் ஊடாக கடவுச்சீட்டைப் பதிவு செய்தல், கடவுச் சீட்டை வழங்குதல் மற்றும் | கணனி முறைமையினூடாக தேவையான தகவல்களைப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | வெளிநாட்டு தூதராலயங்களில் 2018 சனவரி 01 முதல் 2019 யூன் 30 வரை பெறப்பட்ட கடவுச்சீட்டு விண்ணப்பப் பத்திரங்களது எண்ணிக்கையை கடிதத்தின் இணைப்பாக வழங்குமாறு கோரப்பட்டது. 2018 சனவரி 01 தொடக்கம் 2019 யூன் 30 வரை இப்பிரிவால் 72,768 கடவுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டுள்ளன. நீங்கள் அனுப்பிய மாதிரிப் படிவத்தின் பிரகாரம் 72,768 கடவுச் சீட்டுக்களதும் தகவல்களைப் பெறுவது கணனித் தரவு முறைமையின் மூலம் மற்றும் அத்தகவல்கள் நீங்கள் கோரிய மாதிரிப் படிவத்துடன்தொடர்புடைய தகவல் தீர்வு முறைமை மூலமும் ஒவ்வொரு பிரிவு பெறுவதற்குத் தேவையான பிரவேசத்தின் மூலமுமே என்பதில் சந்தேகமில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | கணனி நடவடிக்கைக் கிடையேயான வேறுபாடுகளை இனங்காண்பதற்கான அறிக்கையை வழங்க முடியாதுள்ளமை அறிவிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2003 யூன் 16 ஆந் திகதி தொடக்கம் Informatic International Ltd உடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை 16 ஆண்டுகளாக நடைபெற்ற வாறிருப்பதுடன் உடன்படிக்கையைப் புதுப்பிக்கும் போது திணைக்களமானது உடன்படிக்கைக் காலம் முடிவடைந்து 2 முதல் 3 மாங்களின் பின்னர் நிறுவனம் வழங்கும் சேவை தொடர்பாக திணைக்களம் திருப்தியடைவதாக திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளரால் (தகவல் தொழில்நுட்ப) அறிக்கை வழங்கப்படுகின்றது. அதற்கமைய, ஆண்டுதோறும் உடன்படிக்கை புதுப்பிக்கப்படுகின்றது. 2017 முதல் 2019வரை சேவைக்கட்டண நிலுவையாக ரூபா 9,800,000 அவ்வவ்போது புதுப்பிக்கப்படும் சந்தர்ப்பங்களில் மாதாந்தக் கட்டணத்துடன் இணைத்து வழங்கப்பட்டிருந்தது. | உடன்படிக்கை காலத்திற்கு மாத்திரம் கட்டணம் வழங்கப்படலாம். | உடன்படிக்கையைச் சமர்ப்பிக்கும் கடிதப் பரிமாற்றங்களின் போதம் ஏற்படும் தாமதம் காரணமாக இந்நிலைமை உருவானது. தற்போது அந்த உடன்படிக்கையை நாளதுவரையாக்குவது சம்பந்தமாக கண்காணிப்புக் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. அக்குழுவினது மேற்பார்வையின் கீழ் இதுவரை சகல உடன்படிக்கைகளது தகவல்களையும் உள்ளடக்கிய பட்டோலை ஒன்று தயாரிக்கப்படுகின்றது. அதன் மூலம் காலவரம்பு முடிவடைவதற்கு முன்னர் உடன்படிக்கை நாளதுவரையாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடியதாக உள்ளது. ஆகவே, எதிர்காலத்தில் மேற்குறிப்பிடப்பட்ட தவறு தவிர்க்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வெளிநாட்டு தூதரகப் பிரிவு புதிய கடவுச்சீட்டுக்களுக்கு விண்ணப்பிக்கும் போது சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் தொடர்பாக கடவுச்சீட்டுப் பிரிவால் 2019 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட செயற்பாட்டு கைநூல் 9.1.7 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய, 6, 8, 12 ஆம் பந்திகளின் பிரகாரம் கடவுச்சீட்டை வழங்குவதற்கு விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழின் மூலம் பிரதியின் நிழற் பிரதி, தேசிய அடையாள அட்டையின் நிழற்பிரதி பணம் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டின் நிழற்பிரதி மற்றும் ஏனையவை அவசியமாயினும் 72 சந்தர்ப்பங்களில் அவ்வாறல்லாது கடவுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | செயற்பாட்டுக் கைநூலின் அறிவுறுத்துரைப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடவுச்சீட்டுக்களது தகவல்களும் எமது தரவு முறைமையில் குறிப்பிடப்பட்ட தகவல்களும் இணக்கம் செய்யப்படுகின்றன. கடவுச்சீட்டுக்களை வழங்குவதற்கும் பணிப்புரை வழங்கும்உதவிக் கட்டுப்பாட்டாளரால் அல்லது பிரதிக் கட்டுப்பாட்டாளரால் கடவுச்சீட்டை வழங்குவதற்கான பணிப்புரை வழங்கப்படும். கடவுச்சீட்டு தொலைந்து போகும் சந்தர்ப்பங்களில் அக்கடவுச்சீட்டின் நிழற் பிரதியொன்றை விண்ணப்பத்துடன் அனுப்பியிராத விண்ணப்ப தாரர்களிடமிருந்து மாத்திரம் பிறப்புச்சான்றிதழ் மற்றும் அடையாள அட்டை இருப்பின் அதன் பிரதி ஒன்று கட்டாயமாகப் பெறப்படுவதையடுத்து கடவுச்சீட்டு வழங்கப்படும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் வெளிநாட்டு தூதரகங்களின்மூலம் திணைக்களம் கடவுச்சீட்டுக்களை வழங்கியமையால் பெற்ற வருமானத்தை வேறாக இனங்காண முடியாது இருந்ததால் அக்கடவுச்சீட்டு வருமானமானது உள்ளவாறு பெறப்பட்டது. தானா என்பதை உறுதி செய்ய முடியாதிருந்தது. கணனி முறைமையிலும் இதனை உறுதி செய்ய முடியாதிருந்தது. | வெளிநாட்டு தூதரகங்கள் மூலம் பெறப்படும் கடவுச்சீட்டு வருமானத்தை வேறாக இனங் காண்பதற்கான விதிமுறையை அறிமுகஞ் செய்ய வேண்டும். | 2018 சனவரி 01 முதல் 2019 யூன் 30 வரை அப்பிரிவால் 72,768 கடவுச்சீட்டுக்கள வழங்கப்பட்டுள்ளன. நீங்கள் வழங்கிய மாதிரிப் படிவத்தின் பிரகாரம் 72,768 கடவுச் சீட்டுக்களது தகவல்களையும் கணனி முறைமை மூலமே பெறலாம். அத்துடன் அத்தகவல்கள் நீங்கள் கோரிய மாதிரிப்படிவத்துடன் தொடர்புடைய தகவல் தரவு முறைமையின் மூலம் ஒவ்வொரு பிரீவும் பெறத் தேவையான பிரவேசம் இதுவரை சாத்தியம் அற்றது. ஆகும். ஆகவே, கணக்காய்வில் கோரிய |

| | | |
|---|---|---|
| | | மற்றும் இத்திணைக்களத்தின் தரவு முறைமையின் மூலம் பெறக் கூடிய தகவல்கள் உதவிக் கட்டுப்பாட்டாளர் (தகவல் தொழில்நுட்பம்) மூலம் சான்றுறுதிப்படுத்தப்பட்டு மேற்படி கடிதத்தின் பிரகாரம் கணக்காய்வு அத்தியட்சகரிடம் வழங்கப்பட்டுள்ளது. |
| (உ) வெளிநாட்டு தூதரகங்களினூடாகப் பெறப்படும் 54 கடவுச்சீட்டக்களைத் தெரிவு செய்வைக்குள்ளாக்கும் போது அவை வழங்கப்படுவதற்கு 10 முதல் 74 நாட்கள் தாமதம் ஏற்பட்டிருந்தமை அறியப்பட்டது. | தாமதமின்றி கடவுச் சீட்டுக்கள் வழங்கப்பட வேண்டும். | கணனி முறைமையில் தெரிவு செய்யப்படும் விண்ணப்பங்கள் ACCEPT செய்யப்பட்டு பல்வேறு கட்டங்களில் தயாரிக்கப்பட்டு தொடர்புடைய தூதரகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. |

## 4. மனிதவள முகாமைத்துவம்

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) தாய்லாந்தில் நடைபெற்ற கல்விசார் சுற்றுலாவிற்கு கடவுச்சீட்டுக்களை ஒப்படைப்பதற்கு 5 உத்தியோகத்தர்களது பெயர்களை அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்ட போதும் அதில் பங்குபற்றியோர் கடவுச்சீட்டு உதவியாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர், மற்றும் கணனித் தரவு இயக்குனர் (திணைக்களக் கட்டமைப்பில் இல்லாத பதவி ஆகிய பதவி வகிப்பவர்களே ஆகும்.) | கடவுச்சீட்டை வழங்கும் செயற்பாட்டின் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மாத்திரமே பெயிரிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடவுச் சீட்டை தயாரிக:கும் பணியின் போது அப்பணியானது கணனி மென் அணியினூடாக மொடியூல் ஆகச் செயற்படுவதால் அபிவிருத்தி உத்தியோகத்தரும் அது தொடர்பாக பணியாற்றும் அக்கணனி முறைமை அறிந்த கடவுச்சீட்டு உதவியாளர்களும் அப்போதைய கட்டுப்பாட்டாளர் நாயகத்தால் சர்வதேச அமைப்பினால் நடாத்தப்பட்ட கல்விசார் சுற்றுலாவிற்காக பெயரிடப்பட்டுள்ளனர். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சேவைக்கான அவசியத்தை கருத்திற்கொண்டு முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் DMS/1177/Vol-1 இலக்கமுடைய 2017 நவம்பர் 24 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டு வரை அவ் வெற்றிடங்கள் நிரப்பப்படாமையால் திணைக்களத்தின் செயற் திறனுக்கு இப்பதவிகள் தேவைதானா என்பது சர்ச்சைக்குரியதானது. | தேவையை உணர்ந்து பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |
| (இ) | அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தர்களது கடமைகளுக்கு உதவி புரிவதற்காக திணைக்களத்தின் சேவையாகக் கருதி 50 செயற்பாட்டு உதவியாளர் பதவிகள் 2018 ஆம் ஆண்டிலும் மேலும் 50 பதவிகள் 2019 ஆம் ஆண்டிலுமாக மொத்தம் 100 பதவிகள் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் DMS/1183 ஆம் இலக்க 2017 யூலை 05 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அங்கீகாரமளிக்கப்பட்டிருந்தும் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு வரை அவ்வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |